# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (07.10.2015 முதல் 11.10.2015)

**அறிக்கை எண் 78/2015** **தேதி: 06.10.2015**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 29°செ முதல் 37°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 21°செ முதல் 27°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 18°செ முதல் 21°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் பல இடங்களில் இலேசானது முதல் மிதமான மழை காணப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (07.10.2015 முதல் 11.10.2015)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமானது முதல் கன மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 78-81 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 78-80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 13 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 07.09.15 | 12 | 30 | 22 | 7 | 79 | 79 | 13 | தெற்கு |
| 08.10.15 | 15 | 30 | 22 | 7 | 81 | 80 | 13 | தெற்கு |
| 09.10.15 | 10 | 30 | 22 | 7 | 78 | 78 | 13 | தெற்கு |
| 10.10.15 | 10 | 30 | 22 | 7 | 81 | 80 | 13 | தெற்கு |
| 11.10.15 | 8 | 30 | 22 | 7 | 80 | 79 | 13 | தெற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் நாட்களில் மழை எதிர்பார்க்கப்படுவதால் ஜுலை மாதம் நடவு செய்யப்பட்ட இறவை மரவள்ளிக்கு மேலுரமாக எக்டருக்கு 45 கிலோ தழை சத்து மற்றும்120 கிலோ சாம்பல் சத்து இட்டு மண் அணைக்கவும்.
- ✓ வரும் நாட்களில் மழை எதிர்பார்க்கப்படுவதால்,மானாவாரி நிலங்களில் பயறு வகை பயிர்கள் மக்காச்சோளம் மற்றும் சோளம் விதைக்கவும். ஏற்கனவே விதைப்பு முடிந்த இடங்களில் விட்டுப்போன பகுதியில் விதைக்கவும்.
- ✓ இறவையில் விதைக்கப்பட்ட பச்சைப்பயறு மற்றும் உளுந்து பயிர்களில் மண்ணிலுள்ள அதிக ஈரத்தன்மையால் கிளைகள் வளர வாய்ப்புள்ளது. கிளைகளை வெட்டிவிடவும்.
- ✓ வரும் நாட்களில் மழை எதிர்பார்க்கப்படுவதால், இறவையில் பயிரிடப்பட்ட குளிர் கால கம்போடியா பருத்தி மற்றும் மஞ்சள் பயிருக்கு வடிகால் வசதி செய்யவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ வரும் நாட்களில் மழை எதிர்பார்க்கப்படுவதால், இறவையில் பயிரடப்பட்ட குளிர் கால கம்போடியா பருத்தி மற்றும் மஞ்சள் பயிருக்கு வடிகால் வசதி செய்யவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**